183

TAMIL NADU LEGISLATURE LIBRARY
12 SEP 1978
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1978 மார்ச் 13

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

அவியூர் ஏரிக்கு நீர் வரத்து.

*528—வினா திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென்னாற்காடு மாவட்டம், வராக நதிக் கால்வாயி லிருந்து வல்லம் ஒன்றியத்தைச் சேர்ந்த அவியூர் பெரிய ஏரிக்கு புதிய கால்வாய் வெட்ட வேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்காக ரூ. 87,000க்கு ஒரு முன்னோடி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : அந்தத் திட்டம் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: வராக நதிக்குக் குறுக்கே சேவலப்பேரி கிராமத்திற்கு அருகில் ஒரு அணை கட்டப் பட்டு தண்ணீர் திருப்பி விடப்பட்டிருக்கிறது. அந்த நீர்ப் பாசனத் தின் மூலம் என்ன நிலைமைகள் என்பதை கண்காணித்த பிறகு இந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம்.